**Social Insurance Number – (Tamil)**
**Numéro d'assurance sociale – (tamoul)**

Service Canada

## சமூக காப்புறுதி இலக்கம் என்றால் என்ன?

கனடிய அரசாங்கத்தின் பல்வேறு நிகழ்வுத்திட்டங்களைக் கையாள்வதற்குப் பயன்படுத்தப்படும், தனித்துவமான எட்டு எண்களைக் கொண்ட இலக்கமே சமூக காப்புறுதி இலக்கம். கனடாவில் வாழ்ந்து தொழில் புரிய அல்லது அரசாங்க நிகழ்வுத்திட்டங்கள் மூலம் உதவிப்படிகளையோ சேவைகளையோ பெற்றுக்கொள்ள விரும்பும் ஒருவருக்கு ஒரு சமூக காப்புறுதி இலக்கம் ஒதுக்கப்படும்.

## சமூக காப்புறுதி இலக்கத்துக்கு நான் விண்ணப்பிப்பது எப்படி?

ஒரு சமூக காப்புறுதி இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், பழைய சமூக காப்புறுதி இலக்க அட்டையைப் புதுப்பிப்பதற்கும், உங்கள் சமூக காப்புறுதி இலக்கப் பதிவைத் திருத்துவதற்குமான நடைமுறையை கனடா சேவையகம் மிகவும் எளிதாக்கியுள்ளது. உங்களுக்கு வேண்டிய மூல அடையாள ஆவணங்களை மிகவும் கிட்டிய கனடா சேவை நிலையத்துக்கு எடுத்துச் செல்வதுதான், நீங்கள் செய்யவேண்டிய ஒரே பணி. உங்கள் வேண்டுகோளை அங்கு முன்வைப்பதற்கு ஒரு பணியாளர் உங்களுக்கு உதவி புரிவார்.

உங்கள் அடையாள ஆவணங்கள் சீராக இருந்தால், நீங்கள் அங்கிருந்து புறப்பட முன்னர் ஒரு சமூக காப்புறுதி இலக்கத்தைப் பெற்றுக்கொள்வீர்கள் அல்லது உங்கள் சமூக காப்புறுதி இலக்கப் பதிவைத் திருத்துவிப்பீர்கள். ஒருசில நாட்கள் கழித்து உங்கள் சமூக காப்புறுதி இலக்க அட்டை, அஞ்சலில் உங்களை வந்தடையும். சமூக காப்புறுதி இலக்க அட்டை ஒன்றைப் புதுப்பிப்பதற்கு $10 கட்டணம் அறவிடப்படும். நீங்கள் சட்டப்படி பெயர் மாற்றம் (திருமணம், மணவிலக்கு, சட்டப்படி பெயர் மாற்றம் முதலியன) செய்திருந்தால், உங்கள் அட்டையில் பெயரை (பெயர்களை) மாற்றுவதற்கு கட்டணம் இல்லை.

நீங்கள் அஞ்சல் மூலம் விண்ணப்பிக்க விரும்பினால், ஒரு விண்ணப்பப் படிவத்தை நிரப்பி அனுப்ப வேண்டும். ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் மாத்திரமே விண்ணப்பப் படிவம் கிடைக்கும். நீங்களும் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் மாத்திரமே அதனை நிரப்பி அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவங்களை servicecanada.gc.ca இணையத் தளத்தில் அல்லது உங்கள் உள்ளூர் கனடா சேவை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். கனடிய அரசாங்க நிகழ்வுத்திட்டங்கள், சேவைகள் குறித்து உங்களுக்கு வேண்டிய விபரங்களைப் பெற்றுக்கொள்வதில் உங்களுக்கு உதவி புரிவதற்கு முழுப் பயிற்சி பெற்ற பணியாளர்கள் கனடா சேவை நிலையங்களில் தயாராய் இருக்கிறார்கள்.

நீங்கள் நிரப்பிய விண்ணப்பப் படிவத்தையும், மூல அடையாள ஆவணத்தையும் (ஆவணங்களையும்), (பொருந்தினால்) அட்டையைப் புதுப்பிப்பதற்கான கட்டணத்தையும் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்:

**Service Canada**
Social Insurance Registration Office
P.O. Box 7000
Bathurst, New Brunswick
E2A 4T1

உங்கள் அடையாள ஆவணத்தை (ஆவணங்களை) உங்கள் சமூக காப்புறுதி இலக்க அட்டையுடன் நாம் திருப்பி அனுப்புவோம். அஞ்சலில் தொலையும் ஆவணத்துக்கு (ஆவணங்களுக்கு) நாம் பொறுப்பில்லை என்பதைக் கவனிக்கவும். நீங்கள் பதிவஞ்சல் மூலம் உங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைத்தால், நாங்களும் பதிவஞ்சல் மூலம் உங்கள் ஆவணங்களை அனுப்பி வைப்போம். எனினும், எமது அலுவலகங்களுள் ஒன்றுக்குச் சென்று உங்கள் சமூக காப்புறுதி இலக்கத்துக்கு விண்ணப்பிக்குமாறு உங்களுக்கு நாம் யோசனை கூறுகிறோம்.

## நான் முன்வைக்க வேண்டிய ஆவணங்கள் எவை?

நீங்கள் ஒரு சமூக காப்புறுதி இலக்க அட்டைக்கு விண்ணப்பிக்கும்பொழுது, உங்கள் அடையாளத்தையும், கனடாவில் உங்கள் தகுதிநிலையையும் மெய்ப்பிப்பதற்கு வேண்டிய ஆவணங்களை முன்வைக்க வேண்டும். உங்கள் முதன்மைவாய்ந்த ஆவணத்தில் உள்ள பெயர், நீங்கள் தற்பொழுது பயன்படுத்தும் பெயரிலிருந்து வேறுபட்டால், துணை ஆவணம் ஒன்றையும் நீங்கள் முன்வைக்க வேண்டும். அனைத்தும் **மூல** ஆவணங்களாகவே அமைய வேண்டும்.

நீங்கள் **கனடாவில் பிறந்த கனடியக் குடியினர்** என்றால், நீங்கள் பிறந்த மாகாணத்தால் அல்லது ஆள்புலத்தால் வழங்கப்பட்ட **உங்கள் பிறப்புச் சான்றிதழை** முன்வைக்கவும். 1994 ஜனவரி 1ம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட குயுபெக் பிறப்புச் சான்றிதழ்களை நாம் ஏற்றுக்கொள்வதில்லை. உங்கள் பிறப்புச் சான்றிதழ் அந்தத் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டது என்றால், குடிசார் தகுதிநிலைப் பதிவாளரிடமிருந்து புதிய சான்றிதழ் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் ஒரு **பதிவுற்ற பழங்குடியினர்** என்றால், அத்துடன் அத்தகுதிநிலை உங்கள் சமூக காப்புறுதி இலக்கப் பதிவில் சுட்டிக்காட்டப்படுவதை நீங்கள் விரும்புபவர் என்றால், கனடா பழங்குடியினர் - வடபுல அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட பழங்குடியிரனர் தகுதிநிலைச் சான்றிதழ் ஒன்றையும் நீங்கள் முன்வைக்க வேண்டும்.

நீங்கள் **கனடாவுக்கு வெளியே பிறந்த கனடியக் குடியினர்** என்றால், கனடா குடியுரிமை – குடிவரவு அமைச்சினால் வழங்கப்பட்ட உங்கள் **கனடியக் குடியுரிமைச் சான்றிதழை** முன்வைக்கவும்.

நீங்கள் ஒரு **நிரந்தர வதிவாளர்** என்றால், கனடா குடியுரிமை – குடிவரவு அமைச்சினால் வழங்கப்பட்ட பின்வரும் ஆவணங்களுள் **ஒன்றை** முன்வைக்கவும்:

- நிரந்தர வதிவு அட்டை (நீங்கள் கனடாவுக்குள் இருந்து உங்கள் நிரந்தர வதிவுக்கு விண்ணப்பித்திருந்தால், இது மாத்திரமே ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம்);
- நிரந்தர வதிவு உறுதிப்பத்திரம், வெளிநாட்டுக் கடவுச்சீட்டில் நுழைவனுமதிப் பதிவு (முத்திரை);
- நிரந்தர வதிவு உறுதிப்பத்திரம், கனடாவில் மீளக் குடியமர்வதற்கான ஒற்றைப் பயண ஆவணத்தில் நுழைவனுமதிப் பதிவு;
- நிரந்தர வதிவு உறுதிப்பத்திரம், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணையாளர் பயண ஆவணத்தில் நுழைவனுமதிப் பதிவு;
- நிரந்தர வதிவு உறுதிப்பத்திரம், செஞ்சிலுவைச் சங்க பயண ஆவணத்தில் நுழைவனுமதிப் பதிவு;
- குடிவரவுப் பதிவிதழ்.

நீங்கள் ஒரு **தற்காலிக வதிவாளர்** என்றால், பின்வருவனவற்றுள் **ஒன்றை** முன்வைக்கவும்:

- வேலை அனுமதிப் பத்திரம்;
- கல்வி அனுமதிப் பத்திரம், பணி ஒப்பந்தம்;
- கனடாவில் வேலை செய்யும் தகுதியைச் சுட்டிக்காட்டும் வருகையாளர் பதிவிதழ்;
- இராசதந்திர அடையாள ஆவணம், வேலைபார்க்கும் அனுமதிக் குறிப்பு.

## மேலதிக விபரங்கள்:

மேற்படி பொதுப்படையான விபரம் உங்கள் வசதி கருதியே தரப்பட்டுள்ளது. சமூக காப்புறுதி இலக்கம், அதற்கு விண்ணப்பிக்கும் விதம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு, கனடா சேவையகத்தின் servicecanada.gc.ca இணையத் தளத்தை நாடவும்.